KK12T

# கன்னியாகுமரி மாவட்டப் பொதுத் தேர்வுகள்
# அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2022

-----

## வகுப்பு 12
## பொதுத் தமிழ்

நேரம்: 3 மணி மதிப்பெண்கள்: 90

குறிப்பு i) விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

ii) கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

### பகுதி - I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** 14×1=14

1) நரம்புகளுக்குள் வீணை மீட்டிக் கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது
அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழை மேகங்கள்
இ) மழைத்துளிகள் ஈ) நீர்நிலைகள்

2) 'சிறுவர்தாயே பேரிற் பெண்டே' - இப்பாடலடி இடம் பெறும் நூல்
அ) புறநானூறு ஆ) ஐங்குறுநூறு
இ) நற்றிணை ஈ) பதிற்றுப்பத்து

3) பேச்சுத் தமிழில் அமைந்த தொடரைத் தேர்க.
அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்
ஆ) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது
இ) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது
ஈ) மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன

4) திருக்குறளில் உள்ள பொருட்பாலின் அதிகாரங்களின் எண்ணிக்கை
அ) 38 ஆ) 70 இ) 25 ஈ) 54

5) 'குழிமாற்று' எந்தத் துறையோடு தொடர்புடைய சொல்
அ) இலக்கியம் ஆ) கணிதம் இ) புவியியல் ஈ) வேளாண்மை

6) கூற்று : உவமை, உருவகம் படிமமும் வினை, பயன், மெய், உரு ஆகியவற்றின் அடிப்படையில் தோன்றும்
காரணம் : எவ்வகையான படிமமாக இருந்தாலும் அது காட்சி வழியே கருத்தினை விளக்குவதில்லை
அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று தவறு, காரணம் சரி
இ) கூற்றும் சரி, காரணமும் சரி ஈ) கூற்றும் தவறு, காரணமும் தவறு

7) 'உழாஅது' - இலக்கணக் குறிப்பு தருக.
அ) சொல்லிசை அளபெடை ஆ) ஒற்றளபெடை
இ) செய்யுளிசை அளபெடை ஈ) இன்னிசை அளபெடை

8) மார்கழியில் நடைபெறும் விழா
அ) உத்திர விழா ஆ) பூச விழா
இ) திருவோண விழா ஈ) திருவாதிரை விழா

9) பொருந்தாத ஒன்றைக் கண்டறிக.
அ) தனித்தமிழ்த் தந்தை - மு. வரதராசனார்
ஆ) ஆராய்ச்சிப் பேரறிஞர் - மயிலை. சீனி. வேங்கடசாமி
இ) தமிழ்த்தென்றல் - திரு.வி.க.
ஈ) மொழிஞாயிறு - தேவநேயப்பாவாணர்

10) 'News Reel' என்பதன் தமிழ்ச் சொல்
அ) கருத்துப்படம் ஆ) திரைப்படம் இ) செய்திப்படம் ஈ) படத்தொகுப்பு

11) அல்லல் படுப்பதூஉம் - எவரோடு பழகினால்?
அ) வாள்போல் பகைவர் ஆ) மெய்ப்பொருள் காண்பவர்
இ) எண்ணியாங்கு எய்துபவர் ஈ) தீயினத்தார்

12) 'சங்க காலக் கல்வெட்டும் என் நினைவுகளும்' - என்ற கட்டுரையின் ஆசிரியர்
அ) தோப்பில் முகமது மீரான் ஆ) பூமணி
இ) பக்தவச்சல பாரதி ஈ) ஐராவதம் மகாதேவன்

13) 'அருங்கானம்' - சரியான புணர்ச்சி விதி வரிசையைத் தேர்க.
அ) ஈறுபோதல், தன்னொற்று இரட்டல்
ஆ) ஈறுபோதல், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே
இ) ஈறுபோதல், இனமிகல்
ஈ) ஈறுபோதல், முன்னின்ற மெய் திரிதல்

14) 'நிறை' என்ற மாத இதழின் ஆசிரியர்

அ) சுகந்தி சுப்பிரமணியன் ஆ) சாந்தாதத்

இ) நகுலன் ஈ) சுரதா

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3 x 2 = 6**

15) கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட தமிழின் துணை வேண்டும் என்கிறார்?

16) நிலையாமை குறித்து. சவரி உரைக்கும் கருத்து யாது?

17) பகைவராலும் அழிக்கமுடியாத அரண் யாது?

18) செவியறிவுறூஉ- துறையை விளக்குக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2 x 2 = 4**

19) 'ஆளுக்கொரு மரம் வளர்ப்போம்' என்னும் முழக்கத்தொடர் வாயிலாக எவற்றை வலியுறுத்துவாய்?

20) அக்காலத்துக் கல்வி முறையில் மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் எவை?

21) பின்னணி இசை படத்தின் காட்சியமைப்புக்கு எவ்வாறு உயிரூட்டும்? சான்று தருக.

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக** **7 x 2 = 14**

22) பொருள் வேறுபாடு அறிந்து தொடரமைக்க.

கான் - காண்

23) தொடரில் இடம்பெற்றுள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.

வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக் குட்டியும் யானைக்குட்டியும் கண்டேன்.

24) ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.

அ) தலைக்கோல் ஆ) ஒருமையுடன்

25) ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.

அ) அறுத்து ஆ) நினைக்கின்ற

26) விடைக்கேற்ற வினா அமைக்க.

நடுவண் அரசு 2005 ஆம் ஆண்டு டிசம்பர் 23 அன்று தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தை அமைத்தது.

27) பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.

ரவைக்கு சித்தப்பன காவலுக்குப் போவச் சொல்

28) உவமைத் தொடர்களைச் சொற்றொடரில் அமைத்திடுக.

அ) நகமும் சதையும் போல்

ஆ) உள்ளங்கை நெல்லிக்கனி போல

29) சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.

தாமரை

30) வெண்பாவிற்குரிய தளைகள் யாவை.

## பகுதி - III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2 x 4 = 8**

31) வாடைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?

32) சினத்தால் வரும் கேட்டினைக் கூறுக.

33) 'வாயிலோயே' எனத் தொடங்கும் ஔவையாரின் புறநானூற்றுப் பாடல் பாடாண் திணைக்கு உரியது என்பதை நிறுவுக

34) பங்குனி உத்திரத் திருவிழா நடைபெற்ற முறையைத் திருஞானசம்பந்தர் எவ்வாறு பதிவு செய்கிறார்.

### பகுதி - 2

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக.** **2 x 4 = 8**

35) திரைப்படத்தின் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.

36) சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் - விளக்குக.

37) தாயும் தந்தையும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினராக நீங்கள் செய்யும் உதவிகள் யாவை?

38) மயிலை. சீனி. வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்குச் செய்திகள் உருவாக்கித் தருக.

பிரிவு - 3

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3 x 4 = 12

39) சொற்பொருள் பின்வரும் நிலையணியைச் சான்றுடன் விவரி.

(அல்லது)

'அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல் வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்' - இக்குறட்பாவில் இடம்பெற்றுள்ள அணியைச் சுட்டி விளக்குக.

40) இலக்கிய நயம் பாராட்டுக.

கீழ்க்காணும் பாடலைப் படித்து, மையக்கருத்துடன், ஏற்புடைய மூன்று நயங்களைச் சுட்டி எழுதுக.

வெட்டியடிக்குது மின்னல் - கடல்
வீரத் திரைகொண்டு விண்ணை யிடிக்குது
கொட்டி யிடிக்குது மேகம் - கூக்
கூ வென்று விண்ணைக் குடையுது காற்று
சட்டச்சட சட்டச்சட டட்டா - என்று
தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்
எட்டுத்திசையும் இடிய - மழை
எங்ஙனம் வந்ததடா தம்பி வீரா !

- பாரதியார்

41) நெய்தல் திணையைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

தலைமகன் பாங்கற்கு உரைத்த கூற்றினைச் சான்று தந்து விளக்குக.

42) பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.

கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

(அல்லது)

யானைக்கும் அடி சறுக்கும்

43) <u>தமிழாக்கம் தருக.</u>

i) Learning is a treasure that will follow its owner everywhere
ii) A new language is a new life
iii) Knowledge of languages is the doorway to wisdom.
iv) The limits of my language are the limits of my world.

43) காது கேளாதவர்களுக்கான மாற்று வினா.

கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை. மொழியே மக்கள் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாகவும் உள்ளது. பெற்ற தாயின் முதல் வேட்கை தன் குழந்தையுடன் பேசுதல். அவள் முதலில் அடையும் பெரிய மகிழ்ச்சி, குழந்தையின் பேச்சைக் கேட்பதே ஆகும். குழந்யின் மனவளர்ச்சியோடு தொடர்புடையது. மொழி வளர்ச்சியே ஆகும். மனம் என்பது பெரும்பாலும் மொழியால் வளர்ந்து அமைந்தது. மனத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவே பேசுவாரின் மொழியும் வளர்ச்சிப் பெற்று நிற்கும். மக்கள் அனைவரும் மொழிக்கு ஆசிரியராகவம் உள்ளனர். மாணவராகவும் உள்ளனர். மொழியை வளர்ப்பவரும் மக்களே மொழியால் வளர்பவரும் மக்களே!

**வினாக்கள்:**

1. மொழி என்பது யாது?
2. பெற்ற தாயின் முதல் வேட்கை யாது?
3. மொழி வளர்ச்சி எதனோடு தொடர்புடையது?
4. இப்பத்திக்கு ஏற்ற தலைப்பு தருக.

பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 3 x 6 = 18

44) செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணை கொண்டு நிறுவுக.

(அல்லது)

எளிய மக்களின் வலிகளை நாட்டுப்புற இலக்கிய வடிவங்களே முழுமையாகப் பிரதிபலிக்கின்றன - நிறுவுக.

45) கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக.

(அல்லது)

'ஒவ்வொரு நகரத்திற்கும் வரலாறும் வடிவமும் உண்டு' - நீங்கள் பார்த்த அல்லது வாழ்ந்த ஒரு நகரம் குறித்து கட்டுரை வரைக.

46) 'உரிமைத்தாகம்' கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால் ...... கதையைத் தொடர்ந்து எழுதி முடிக்க.

(அல்லது)

மகாநடிகரைக் கண்ட பாலச்சந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக.

## பகுதி - V

47) அடி பிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக. **4 + 2 = 6**

அ) 'குகனோடு ஐவர்' - எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை எழுதுக.

ஆ) 'அரிது' - என முடியும் குறட்பாவை எழுதுக.

- - - - -